**பேருவளை நகர சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 22 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பேருவளை நகர சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய வியாபார வரி ரூபா 102,000 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறின்றி ஏனைய வருமானங்களிலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்குரிய மூலதன மானியத் தொகை ரூபா 4,418,657 ஆக இருந்த போதிலும், அது நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,888,588 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் மூலதன மானியத் தொகை ரூபா 2,530,069 குறைவாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் வேலைக் கடன்பட்டோர் பெறுமதி ரூபா 2,530,069 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்குரிய மூலதனச் செலவினம் ரூபா 9,337,232 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 11,241,897 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டில் மூலதனச் செலவினம் ரூபா 1,904,665 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

மேலும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலைக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 2,531,069 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 4,435,731 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக வேலைக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 1,904,662 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டிற்குரியதாக மீளாய்வாண்டின் போது கிடைத்த முத்திரைக் கட்டணம் ரூபா 2,758,070 தொகை மீளாய்வாண்டின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய முத்திரைக் கட்டண வருமானம் கணிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 55,519 தொகையான அலுவலக உபகரணங்கள் மற்றும் ரூபா 26,668 தொகையான இயந்திர உகரணங்கள் என்பன மூலதன செலவின விடயத்தின் கீழ் காண்பிக்கப்படாமல் மீண்டெழும் செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்புத் தொகை ரூபா 13,424,764 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 13,446,509 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக நிலையான வைப்பு மீதி ரூபா 21,745 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி ரூபா 496,242 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 480,624 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டில் நிலையான வைப்பு வட்டி ரூபா 15,618 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

10 கணக்கு விடயங்களுக்குரிய கணக்குகளின் பிரகாரம் மீதி ரூபா 65,367,764 ஆக இருந்ததுடன் அவற்றுக்குரிய பட்டோலைகளின் பிரகாரம் மீதி ரூபா 66,873,877 ஆனமையால் ரூபா 1,506,113 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

விரிவான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாமையினால் கூட்டுமொத்தமாக ரூபா 4,767,568 தொகையான 6 கணக்கு மீதிகளைக் கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணங்காமைகள்**

இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371(அ) இன் பிரகாரம் எந்தவொரு செயற்பாட்டிற்காகவும் வழங்கப்படுகின்ற முற்பணம் அந்தச் செயற்பாடு நிறைவுபெற்றதும் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2015 திசெம்பர் 11 ஆந் திகதி வரை 2008 ஆம் ஆண்டிலிருந்து கொண்டுவரப்படுகின்ற தீர்க்கப்படாத முற்பண மீதி ரூபா 252,285 ஆகும்.

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 28,402,723 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 20,858,335 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 நிலுவை வருமானம்

மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுமொத்தமாக ரூபா 24,596,759 நிலுவை வருமானம் நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் (255) அதிகாரத்தின் 160, 165, 170 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 ஆதனவரி

(அ) 2015 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 19,317,599 தொகையான நிலுவை ஆதனவரி மீதியில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 6,335,091 தொகை அதாவது 33 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டிற்கான பற்றுச்சீட்டிடல் ரூபா 15,267,795 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 5,885,511 தொகை அதாவது 39 சதவீதம் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

### 2.2.3 அறிவித்தல் பதாதைக் கட்டணம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டுள்ள அறிவித்தல் பதாதைகளுக்காக ரூபா 173,250 தொகையான கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) 69 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 115,378 தொகையான ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 ஆம் ஆண்டின் நூலகப் புத்தகங்களின் மெய்மையாய்வின் போது அவதானிக்கப்பட்ட நகர சபையின் பிரதான நூலகத்திலும் மருதானை வாசிப்பு மண்டபத்திலும் முறையே ரூபா 39,046 பெறுமதியான 327 புத்தகங்களினதும், ரூபா 2,069 பெறுமதியான 23 புத்தகங்களினதும் பற்றாக்குறை உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் பெறுமதி சேர் வரிக் கணக்கின் மீதியான ரூபா 1,636,979 தொகை மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மீதியான ரூபா 96,004 தொகை என்பன கணக்காய்வுத் திகதியான 2016 மே 31 ஆந் திகதி வரையிலும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியனர் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு இருந்தது.

| | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளபடியான | வெற்றிடம் |
|---|---|---|---|
| பதவிநிலை | 03 | 02 | 01 |
| இரண்டாம் | 38 | 33 | 05 |
| மூன்றாம் | 02 | 02 | - |
| கனிஷ்ட | 135 | 118 | 17 |
| | 178 | 155 | 23 |

சபையின் பதவியணியில் 23 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும், பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் உள்ளபடியான பதவியணினரை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியாக்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

(அ) ஹலவகொட வீதியின் பழுதுகளை திருத்தி தார் இட்டு புதுப்பிக்கும் செயற்திட்டம் ரூபா 408,130 தொகையான அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடொன்றின் அடிப்படையில் ரூபா 582,030 செலவிட்டு நிறைவேற்றப்பட்டிருந்தது. வேலை பூர்த்தி அறிக்கையின் படி மேலதிகமாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 173,900 தொகையான வேலை தொடர்பாக உப மதிப்பீடொன்று தயாரித்து அங்கீகாரம் பெறப்பட்டிராததுடன் பொருள் தேவைப்பட்டியலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பழைய வீதிக்கு தார் இட்டு திருத்தியமைப்பதற்காக ரூபா 188,596 தொகையான மதிப்பீடொன்று சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட முறையில் வழங்கப்படுகின்ற ABC கலவை வழங்கி கோவைப்படுத்தப்பட்டு அளவிடை செய்ததன் பின்னர் வீதியின் மேல் செப்பனிடுதல் 08 தொன்னுக்கு குறையாத வீதிச் செப்பனிடுகையால் தண்ணீர் சேர்த்து செப்பனிடுவதற்காக 3.5 ABC கியூப் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், பொருள் விநியோகிக்கும் குறிப்பின் பிரகாரம் இந்த வீதிக்கு ABC கலவை 1.87 கியூப் மாத்திரமே சேர்க்கப்பட்டிருந்தது. அவ்வாறே கருங்கல் 1 ½’’ கியூப்பிற்கு பதிலாக 0.93 கியூப் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிர்வாகம்